# 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தஞ்சைப் பெரியார், முன்னாள் அமைச்சர்

## மன்னை ப.நாராயணசாமி

அவர்கள்



"எறும்பனையர் எம் மறவர் இன்னனையர் நம் மன்னை"
– பேரறிஞர் அண்ணா

"மன்னை எனது அன்னை"
– முத்தமிழ் அறிஞர் கலைஞர்

.............. என்றும் உங்கள் வழியில் பேரன் ..............

**மன்னை த.சோழராஜன் B.E.,**
நகர்மன்றத் தலைவர் – மன்னார்குடி
( மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் )

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி 113 (அ) வட்டக் கழகச் செயலாளர்

# த.தேவராஜ் இல்லத் திருமண வரவேற்பு விழா!

### அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி வாழ்த்து! நே.சிற்றரசு தலைமை!

சென்னை, அக். 17-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி 113 'அ' வட்டக் கழகச் செயலாளர் த.தேவராஜ் - திருமதி பாமா ஆகியோரின் புதல்வர் டி.செந்தில்குமாருக்கும் நெல்லை மாவட்டம் ஆலங்குளம் நினைவில் வாழும் வி.எஸ். நடராஜன் - திருமதி சாந்தி ஆகியோரின் புதல்வி என். வின்சி ஆகியோரின் திருமண வரவேற்பு விழா முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துகளுடன் 19.10.2023 வியாழக்கிழமை மாலை 6.00 மணியளவில் தியாகரா யர் நகர் அபிபுல்லா சாலையில் உள்ள பசும்பொன் தேவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



திருமண வரவேற்பு விழாவிற்கு சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு தலைமை வகிக்கிறார்.

அன்பகம் கலை, தயாநிதிமாறன் எம்.பி., மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ., மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், கே.ஏழுமலை எம்.சி., ப. திருமலை பொன்னுரங்கம் எம்.சி., துபாய் வி.ஆர். விஜய், டாக்டர் கலை கதிரவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஐ.சி.எப். துரை, சி.பாட்ஷா பாபு, எஸ்.எம். கே.அண்ணா துரை, க.முருகன், ப.குமரேசன், சோலை எல்.ரவி, எஸ்.சங்கர், ஜி. அம்மு, ஜி.எம்.சரவணன், தர்மா வெங்கட், கோ. ராமு, இ.எஸ்.செல்வம், எஸ்.முருகன், எம்.பன்னீர் செல்வம், ஐ.சதீஷ்குமார், எஸ்.எம்.சுரேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இவ்விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மேலும் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ., தொ.மு.ச. சண்முகம், எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., தொ.மு.ச. நடராஜன், ஏ.எம்.விக்கிரமராஜா ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

இவ்விழாவில் மேயர் பிரியாராஜன், துணை மேயர் பிரியாராஜன், துணை மேயர் மு.சண்முகம், பூச்சி எஸ்.முருகன், கு.க.செல்வம், ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., நுங்கை வி.எஸ்.ராஜ், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., ராஜா அன்பழகன் எம்.சி., ஐ.கென்னடி, மாம்பலம் ஆ.சந்திரசேகர், கே.ஜெ.சரவணன், வி.பி.மணி, து.விக்டர், வி.எஸ்.கலை, ஜெ. எஸ்.அகஸ்டின் பாபு, ஆர். என்.துரை, ஏ.சங்கீதா மற்றும் பலர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

நுங்கை ப.மகேஷ், எம். என்.விஷ்ணு, ஏ.மதன் பாபு, ஆர்.டி.ஆர்.சீனு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

தயாநிதி மாறன் எம்.பி. - பிரியா ராஜன் முன்னிலை! எஸ்.முரளி வரவேற்பு!

# மாவட்டப் பிரதிநிதி டி.எஸ்.சேகர் இல்லத் திருமண வரவேற்பு விழா!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையேற்று வாழ்த்துகிறார்!

சென்னை, அக். 17-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி, மாவட்டப் பிரதிநிதி டி.எஸ்.சேகர் - எஸ்.லதா ஆகியோரின் புதல்வி எஸ்.சுபஸ்ரீக்கும், சென்னை, அசோக் நகர், என்.பத்ரிநாத் - பி.செந்தாமரை ஆகியோரின் புதல்வர் எம்.பி.அபிஷேக் நிரஞ்சனுக்கும் திருமண வரவேற்பு விழா நாளை (18.10.2023 - புதன் கிழமை) மாலை 6 மணியளவில், எம்.எஸ்.ஆர். மஹால், எண். 9, ராஜா அண்ணாமலை ரோடு, புரசை வாக்கம், தாசபிரகாஷ் அருகில் நடைபெறுகிறது.

திருமண வரவேற்பு விழாவில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை வகித்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் எம்.பி, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.



திருமண வரவேற்பில் அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், பாராளுமன்ற, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதி கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

துறைமுகம் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி, வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை, பகுதி துணைச் செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி ஆகியோர் வரவேற்கின்றனர்.

புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில்

# மாதவரம் தியாகி விஸ்வநாத தாஸ் நகரில் கைம்பெண்ணுக்கு குடிசை வீடு மற்றும் நிதி உதவி!

சென்னை, அக். 17-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 வது வட்டம் தியாகி விஸ்வநாத தாஸ் நகரில் வசித்து வருபவர் நினைவில் வாழும் சந்தானம் அவர்களின் மனைவி சாந்தி ஆவார். இவருக்கு ஒரு மகன் உள்ளார்.இவரது வீடு தியாகி விஸ்வநாததாஸ் நகரில் இரண்டாவது பிரதான சாலையில் அமைந்துள்ளது இவரது வீடு கடந்த ஒரு வருட காலமாக மேற்கூரை சிதிலமடைந்து சுற்றுச்சுவர் இன்றி காணப்பட்டது.

இது சம்பந்தமாக சாந்தி கடந்த இரண்டு வாரத்திற்கு முன் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் அவர்களிடத்தில் தன்னுடைய கூரை வீட்டை சீரமைத்து தருமாறு வேண்டுகோள் வைத்தார்.

இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட புழல் எம் நாராயணன் தனது சொந்த செலவில் மேற்படி சாந்தியின் கூரை வீடு அமைப்பதற்கு தேவையான ஓலை கம்பு உள்ளிட்ட பொருட்கள் வாங்குவதற்கு நிதி உதவி அளித்து வீட்டை கட்டிக் கொடுத்தார்.

மேலும் வீட்டினுள் தரை போடுவதற்கு தேவையான பொருட்களை வாங்குவதற்கும் நிதி உதவியும் செய்தார்.

கட்டி முடிக்கப்பட்ட வீட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன், வட்டச் செயலாளர் கே.கருணாகரன், தியாகி விஸ்வநாத தாஸ் நகர் குடியிருப்போர் நல சங்க தலைவரும் பகுதி பிரதிநிதி ரயில்வே சி. மூர்த்தி, மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என். அஜய் தென்னவன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ் .சிவக்குமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், வட்டக் கழக நிர்வாகிகள் எஸ். பாலாஜி, தீயம்பாக்கம் எம். ஜான்சன், பூபாலன், வடபெரும்பாக்கம் டாக்டர் எம். மைக்கேல், பி. செந்தில், தியாகி விஸ்வநாத தாஸ் நகர் குமார், கலைமணி, ஜி. சுரேஷ், ஆர். சுரேஷ், பாக முகவர் சரஸ்வதி உள்ளிட்ட திரளானவர் சென்று வீட்டை பார்வையிட்டு சாந்தியிடம் ஒப்படைத்தனர்.

மேலும் தியாகி விஸ்வநாத தாஸ் நகரில் வசிக்கும் அனைத்து பொது மக்களுக்கும் காலை உணவு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் வழங்கப் பட்டது.

உதவி கேட்டவுடன் செய்து கொடுக்க உத்தர விட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் தியாகி விஸ்வநாததாஸ் நகர் பொதுமக்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.



மாதவரம் சட்டமன்றத் தொகுதி 17வது வட்டம் தியாகி விஸ்வநாத தாஸ் நகரில் வசித்து வரும் சாந்தி என்பவரின் வீடு சிதிலமடைந்ததை அறிந்த மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் மேற்படி வீட்டின் கூரையை சீர் செய்து வீட்டினுள் தரை அமைக்க நிதி உதவி அளித்து வீட்டை சீரமைத்து, வீட்டை சாந்தி அவர்களிடம் ஒப்படைத்தார். 17 ஆவது வட்டச் செயலாளர் கே.கருணாகரன், பகுதி பிரதிநிதி சி.மூர்த்தி, மா,தவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என்.அஜய் தென்னவன், எஸ். சிவக்குமார், கே.சண்முகப்ரியன், எம்.ஜான்சன், எஸ்.பாலாஜி, பூபாலன், குமார், சுரேஷ், ஜி.சுரேஷ், கலைமணி, அண்ணாமலை உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். இராகவானந்தம்
**அக்டோபர் 17 (1999)**



திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர்.

தொழிற் சங்கத் தலைவராக பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக அமைச்சராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

பகுதிப் பிரதிநிதி ஏ.யு.மணிவண்ணன் சகோதரர்

# ஏ.யு.பாண்டியன் 16ஆம் நாள் நினைவஞ்சலி - படத்திறப்பு!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்பு!

சென்னைஅக்.17-

சென்னை கிழக்கு மாவட்டம் பகுதிப் பிரதிநிதி எழும்பூர் வடக்கு பகுதி ஏ.யு. மணிவண்ணன் சகோதரர் ஏ.யு.பாண்டியனின் 16ஆம் நாள் நினைவஞ்சலி - படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (17/10/2023 - செவ்வாய்க்கிழமை) இரவு 7.00 மணியளவில் கே.பி.பார்க், டிமலஸ் ரோடு, புளியந்தோப்பில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டு மறைந்த ஏ.யு.பாண்டியன் திருஉருவப் படத்தை திறந்து வைத்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, சொ.வேலு எம்.சி, முன்னாள் எம்.எல்.ஏ கே.எஸ். ரவிச்சந்திரன், தி தயாளன், வி.அபாய், டி.கிருஷ்ணன், மு.கமலக்கண்ணன், எல்.ஐ.சி.கர்ணா, என். காந்தி, டி.கே.விஜயராஜ், டி. விஸ்வநாதன், வி.கே. ரவி, ஜெ.முரளிதரன், கே. அன்பிற்கரசி, எம்.வெங்கட், என்.நந்தகுமார், எஸ். முனுசாமி, வி.ராஜா, ஒய். சி.ராஜ்குமார், எம். சேஷாத்ரி, தென்மாறன், எம்.ஆறுமுகம், ஜி.தயாசங்கர், ஆர்.குமரவேல், த. முனிஷ்தயாநிதி, நீ.தாஸ்ஸ்டீபன், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சு. ஜம்புலிங்கம்
**அக்டோபர் 17 (2004)**



இளமைக் காலத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு, மாவட்ட பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராக பத்து ஆண்டுகளுக்கு மேலாகவும், பகுதிச் செயலாளராகவும், மாவட்ட துணைச் செயலாளராக இருமுறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். கலைஞர் நகர் பகுதி உருவாக்கியபோது, அப்பகுதிக் கழகத்தின் முதல் பொறுப்பாளராகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சென்னை மாநகராட்சி 131வது வார்டு கவுன்சிலராக இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதியில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**